## அங்காடி வியாபாரியின் வரிக் கடப்பாடு

இந்த வழிகாட்டி உங்கள் வருமான வரிப் படிவத்தில் உங்களின் தொழில் வருமானத்தை தெரிவிப்பதற்கு உதவும். ஒரு சுய-தொழில் செய்பவரான உங்களுக்கு பின்வரும் கடப்பாடுகள் உள்ளன:

அ) உங்கள் தொழிலின் முறையான பதிவுகள் மற்றும் கணக்குகளை 5 ஆண்டுகள் வரை வைத்திருக்கவேண்டும்

ஆ) உங்கள் வருமான வரிப் படிவத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்து மற்றும் செலுத்த வேண்டிய வரித் தொகையை மதிப்பீட்டு அறிக்கையில் உள்ள நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளாக செலுத்த வேண்டும்.

இ) கட்டாய மெடிசேவ் சந்தாக்களை செலுத்தவேண்டும்.

## முறையான கணக்கறிக்கைகளை மற்றும் ஆவணங்களை வைத்துக்கொள்ளுதல்

### 1. நான் என்ன தொழில் ஆவணங்களை வைத்துக்கொள்ள வேண்டும்?

வருமான வரியின் பொருட்டு 1 ஜனவரி 2007 முதல், நீங்கள் உங்கள் தொழில் பரிவர்த்தனைகள் குறித்த முறையான ஆவணங்கள் மற்றும் கணக்கறிக்கைகளை 5 ஆண்டுகளுக்கு வைத்திருக்க வேண்டும். கணக்கறிக்கைகள் மற்றும் பிற ஆவணங்களின் தொகுப்பு, விலைப்பட்டியல்கள். வரவு சீட்டுகள், கட்டண உறுதிச்சீட்டு மற்றும் அறிக்கைகளால் உறுதிப்படுத்தபடவேண்டும்.

இது உங்கள் வருமானம் மற்றும் அனுமதிக்கக்கூடிய தொழில் செலவுகளை எங்களால் உடனே உறுதிப்படுத்த உதவும். குறிப்பாக சரிபார்ப்பதற்குக் கேட்கப்பட்டாலன்றி இந்த ஆவணங்களை அனுப்பத் தேவையில்லை. தவறான ஆவணங்கள் உத்தேசத் தொகை ஆகியவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

### 2. நான் எவ்வாறு ஆவணங்களை வைத்துக் கொள்ளவது?

**2.1 <u>விற்பனை</u>**

உங்கள் விற்பனை பதிவுகளை துல்லியமாக வைத்திருப்பதை உறுதி செய்துகொள்வதற்காக நீங்கள் பின்வருவனவற்றைப் பராமரிக்க வேண்டும்:

(அ) பணப்பதிவேடு நாடா; மற்றும்/அல்லது

(ஆ) தினசரி விற்பனைப் பதிவுப் புத்தகம்

**பணப் பதிவு நாடா**

உட்புறம் ஒரு நாடாவைக் கொண்டிருக்கும் ஒரு பணப்பதிவேடு உங்கள் அனைத்து ரொக்க பரிவர்த்தனைகளையும் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படலாம். நீங்கள் உங்கள் ரொக்க பரிவர்த்தனை முழுவதையும் பதிவு செய்து, உட்புற நாடாவை ஒரு ஆதார ஆவணமாக கைவசம் வைத்திருக்க வேண்டும்.

ஒரு நாளின் இறுதியில் மொத்தத் தொகையின் வரவு சீட்டுக்களைப் பணப்புத்தகத்தில் பதிவு செய்யவேண்டும். இந்த நாடாக்கள் மற்றும் உங்கள் பதிவுகளுக்கிடையே, ஏதேனும்

முரண்பாடுகள் இருந்தால், நீங்கள் ஒரு எழுத்துப்பூர்வமான விளக்கத்தை அளித்து அதை அந்தக் குறிப்பிட்ட நாடாவுடன் இணைக்கவேண்டும்.

**ஓவ்வொரு நாளின் விற்பனை பதிவேடு புத்தகம்**

பணப் பதிவேடு இல்லாத பட்சத்தில், நீங்கள் உங்கள் ஒவ்வொரு நாளின் விற்பனைகளைப் பதிவு செய்வதற்காக ஒரு விற்பனைப் புத்தகத்தைப் பராமரிக்கவேண்டும். ஒவ்வொரு நாளின் மொத்த விற்பனைப் பதிவுகளின் மாதிரிக்குப் பிற்சேர்க்கை 1-ஐப் பார்க்கவும்.

எடுத்த ரொக்கம் உங்கள் கொள்முதல்களுக்கு அல்லது உங்கள் இயக்க செலவுகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தால், நீங்கள் பயன்படுத்திய ரொக்கத்தை முறையாகப் பதிவு செய்து அவற்றை நிகர விற்பனைகளில் சேர்க்கவேண்டும். தயவு செய்து அந்த மொத்த ரொக்கத்தை உங்களின் மொத்த வருமான வரி படிவத்தில் வியாபார விற்றுவரவாகத் தெரியப்படுத்த வேண்டும்.

## 2.2 <u>விற்பனைச் சாவடியின் வாடகை</u>

நீங்கள் உங்கள் விற்பனைச் சாவடியைக் குத்தகைக்கு விட்டிருந்தால், நீங்கள் அந்த வாடகை வருவாயை உங்கள் தொழில் விற்றுவரவில் சேர்க்கவேண்டும். வாடகையின் காலம் மற்றும் ஏற்கப்பட்ட வாடகைத் தொகை ஆகியவற்றைக் குறிப்பிட்டு, ஒரு வாடகை ஒப்பந்தத்தைத் தயார் செய்யவேண்டும். அந்த ஒப்பந்தத்தில் முறையே நீங்களும், குத்தகைக்காரரும் கையொப்பமிட்டிருக்கவேண்டும்.

## 2.3 கொள்முதல் மற்றும் பிற செலவுகள்

உங்கள் வியாபார கொள்முதல் மற்றும் பிற செலவுகளுக்கான ஆவணங்கள் மற்றும் பதிவுகளை நீங்கள் முறையாக வைத்திருக்கவேண்டும். உதாரணமாக, விலைப்பட்டியல்கள், உறுதிச்சீட்டுக்கள். வரவுசீட்டுகள் மற்றும் பிற ஆவணங்கள் போன்றவை. சில உதாரணங்கள்:

| அனுமதிக்கக்கூடிய தொழில் செலவுகள் | பதிவுகளின் வகை(கள்) |
|---|---|
| கடைக்கு செலுத்தப்பட்ட வாடகை | கடை உரிமையாளர் உடனான வாடகை ஒப்பந்தம் அல்லது NEA கடிதம் அல்லது GIRO கழிவுகளாக இருந்தால் வங்கி அறிக்கை |
| கடைக்கு செலுத்தப்பட்ட சொத்துவரி | சொத்துவரி பட்டியல்கள் |
| கடைக்காக செலுத்தப்பட்ட அடமான வட்டி | வங்கி அறிக்கைகள் |
| பயனீட்டு கட்டணங்கள் | சிங்கப்பூர் பவர் சப்ளை பட்டியல்கள் |
| தொழிலுக்கான தொலைபேசிக் கட்டணம் | சேவை வழங்குனரின் பட்டியல்கள் (எ.கா:SingTel, MI, Starhub) |
| பட்டுவாடா மற்றும் போக்குவரத்துக் கட்டணங்கள் | வாடகை உந்து வண்டி வரவு சீட்டுகள் அல்லது டீசல் பட்டியல்கள் |
| துணையாளர்/உதவியாளர்/துப்புரவு செய்பவர்களுக்கான சம்பளம்/ஊதியம் | கட்டண உறுதிச்சீட்டு அல்லது சம்பளம் அல்லது ஊதியத்திற்கான அட்டவணை |
| துணையாளர்/உதவியாளர்/துப்புறவு செய்பவர்களுக்காக முதலாளி செலுத்திய கட்டாய ம.சே.நி சந்தா | மசேநி அறிக்கைகள் |
| தொழில் பயன்பாட்டிற்காக வாங்கப்பட்ட நிலையான சொத்துகள் மீதான மூலதனக் கழிவுகள் | வாங்கப்பட்ட நிலையான சொத்துக்களுக்கான விலைப்பட்டியல்கள் அல்லது வரவுச்சீட்டுகள் |

சுருங்கக் கூறின், உங்கள் தொழில் செலவுகளை ஒன்றாக்கி, நீங்கள் ஒரு பட்டியலைத் தயார் செய்யலாம். பிற்சேர்க்கை 3-ல் மாதாந்திர தொழில் செலவுப் பதிவுகளைப் பார்க்கவும்.

நீங்கள் வாங்கிய பொருள் அல்லது சேவையை வரவுச் சீட்டுகள் விவரிக்கவில்லை என்றால், நீங்கள் அந்த வரவு சீட்டுகள் மீதான பரிமாற்றத்தின் விவரங்களைக் கொடுக்க வேண்டும். வழங்குனர் எந்த வரவுசீட்டையும் கொடுக்காவிட்டல், நீங்கள் வழங்குனர் அல்லது சேவையளிப்பவர் பெயர், நாள், சரக்குகள் அல்லது சேவைகளின் விவரம் மற்றும் செலுத்தப்பட்டத் தொகைக்காக ஒரு பதிவுப் புத்தகத்தைப் பராமரிக்கவேண்டும். பிற்சேர்க்கை 4-ல் மாதாந்திர மூலப்பொருட்களின் பதிவு மாதிரியைப் பார்க்கவும்.

## 2.4 வங்கிக் கணக்குகள்

நீங்கள் தொழில் மற்றும் தனியார் தேவைகளுக்காக தனித்தனி வங்கிக் கணக்குகளை பராமரிக்கவேண்டும் மற்றும் இந்த தொழில் வங்கிக் கணக்குகள் தொழில் பரிமாற்றங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும். நீங்கள் தொழில் மற்றும் சொந்த வங்கிக் கணக்குகளின் வங்கி அறிக்கைகள் அல்லது கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கவேண்டும்.

## 3. நான் வைத்திருக்கும் பதிவுகளை எவ்வாறு பயன்படுத்துவது?

ஆண்டின் இறுதியில், நீங்கள் தொழில் பதிவுகளின் தொகுதியை உங்களின் கணக்குகளின் அறிக்கையைத் தயார் செய்வதற்காகப் பயன்படுத்தலாம்.

## 4. சான்றளிக்கப்பட்ட கணக்குகளின் அறிக்கை என்றால் என்ன?

சான்றளிக்கப்பட்ட அறிக்கைகள் என்பவை கணக்குகள் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதைக் குறிப்பதற்காக நீங்கள் கையொப்பமிட்ட ஆதாய இழப்பு அறிக்கைள் மற்றும் இருப்புநிலைக் குறிப்பு ஆகும்.

ஒரு ஆண்டின் வர்த்தக முடிவை, அதன் ஆதாயம் மற்றும் இழப்பு அறிக்கைக் காட்டும். மொத்த விற்றுவரவு மொத்த செலவுகளை மீறினால் அது நிகர ஆதாயமாகும். மொத்த செலவுகள் மொத்த ஆதாயத்தை மீறினால் அது நிகர இழப்பாகும். சான்றளிக்கப்பட்ட கணக்கறிக்கையின் மாதிரியைப் பார்க்கவும்.

ஏற்பட்ட சில தொழில் செலவுகள் வரித் தேவைகளுக்காக கழிக்கப்படமாட்டாது. வருமான வரிக் கணக்கைத் தயார் செய்யும் போது, நீங்கள் கழிக்கப்படக்கூடிய செலவுகள் மட்டும் கோரப்படுவதை உறுதி செய்யவேண்டும். தயவு செய்து அடுத்த பகுதியில் வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்வதற்கான மேல் விவரங்களைப் பார்க்கவும்.

இருப்புநிலைக்குறிப்பு, சொத்துக்கள், கடன்கள் மற்றும் தொழிலில் முதலீடு செய்யப்பட்டுள்ள பணம் ஆகியவற்றை நாட்காட்டி ஆண்டின் இறுதியில் காட்டும்.

நீங்கள் ஒரு கணக்குவைப்பு வல்லுனரை முறையான கணக்குகளின் அறிக்கைகளை உங்களுக்காக தயார் செய்து தருமாறு கோரலாம்.

## வருமான வரிப் படிவத்தைத் தாக்கல் செய்தல்

**1. நான் எனது அங்காடி வியாபாரத்தை இப்போதுதான் துவங்கியுள்ளேன். இது குறித்து IRAS-க்கு நான் தகவல் தெரிவிக்க வேண்டுமா?**

நீங்கள் தொழில் துவங்கியவுடன் IRAS-க்கு தெரிவிக்க வேண்டியதில்லை. ஒரு வருமான வரிப் படிவம் (படிவம் B அல்லது B1) உங்களுக்கு அடுத்த ஆண்டின் தொடக்கத்தில், அனுப்பி வைக்கப்படும். வழக்கம் போல் மார்ச் 15-க்கு முன்னர், நீங்கள் உங்கள் வருமானத்தை அதில் தெரியப்படுத்தலாம்.

ஆயினும், நீங்கள் மார்ச் 15-க்கு முன்னர் வருமான வரிப் படிவத்தைப் பெறவில்லை என்றால், நீங்கள் "Registration Form for New Individual Taxpayer"ஐ (புதிய தனிநபர் வரிச் செலுத்துபவருக்கான பதிவுப்படிவம்) எங்கள் வலைதளத்திலிருந்துப் பதிவிறக்கி, நிறைவு செய்து எங்களுக்கு தொலைப்பிரதி அல்லது அஞ்சல் மூலமாகத் திருப்பி அனுப்பலாம்.

**2. என் தொழில் வருமானம் எப்போது வரிக்கு உட்படுத்தப்படும்?**

உங்களின் இந்த ஆண்டுக்கான வருமானம் தொடர்ந்து வரும் ஆண்டில் வரிக்கு உட்படுத்தப்படும். உதாரணமாக, உங்களின் 2007-ஆம் ஆண்டுக்கான வருமானம் 2008-ஆம் ஆண்டு வரிக்கு உட்படுத்தப்படும், அது மதிப்பீட்டு ஆண்டு 2008 என்று அழைக்கப்படும்.

உங்கள் அங்காடி வியாபாரத்தின் ஆதாயம் அல்லது இழப்பைக் கணக்கிடுவதற்கான காலம் உங்கள் தொழில் துவங்கிய நாள் முதல் அந்த ஆண்டின் 31 டிசம்பர் வரையாகும். அதன் பின் தெரியப்படுத்த வேண்டிய காலம் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை ஆகும்.

**3. நான் எனது தொழில் வருமானத்தை எங்கே தெரியப்படுத்துவது?**

ஒரு சுயதொழில் செய்யும் நபராக, உங்களின் தொழில் வரவு உங்களின் சொந்த வருமானத்தின் ஒரு பகுதியாக கருதப்படும் மற்றும் தனிநபர் வருமானவரிகளின் அடிப்படையில் வரிக்கு உட்படுத்தப்படும்.

ஒரு தனி உரிமையாளரான, நீங்கள் உங்கள் தொழில் வருமானத்தை உங்களின் தனிநபர் வருமான வரிப் படிவத்தில் (படிவம் B) "சுய தொழிலின்" கீழ்வரும், வர்த்தகம், வியாபாரம்., தேர்ச்சித் தொழில் அல்லது தொழில் என்ற பிரிவின் கீழ் தெரியப்படுத்தவேண்டும்.

ஒரு கூட்டுத் தொழிலுக்கு, முன்னோடி பங்காளி, கூட்டுத் தொழிலின் வருமானத்தைப் படிவம் P-யில் தாக்கல் செய்யவேண்டும். ஒரு கூட்டுத் தொழிலுக்கு, நீங்கள் உங்கள் கூட்டுத் தொழிலின் வருமானத்தை, உங்கள் தனிநபர் வருமான வரிப் படிவத்தில் (படிவம் B) ''வர்த்தகம், தேர்ச்சித் தொழில் அல்லது தொழில்'' என்ற பிரிவின் கீழ் தெரியப்படுத்த வேண்டும்.

கூட்டுத் தொழிலிலிருந்து கிடைத்த சம்பளம், ம. சே. நி. வட்டி, வாடகை மற்றும் இதர சிங்கப்பூர் வருமானத்தின் மொத்தத் தொகையாகும்.
வர்த்தகம், தேர்ச்சித் தொழில் அல்லது தொழில் என்ற பிரிவின் கீழ் அறிக்கைப்படுத்த வேண்டும்.

கூட்டுத்தொழிலின் வருமானத்தில் உங்கள் பங்கு என்பது பங்காளிகளுக்கிடையே வகுக்கக்கூடிய ஆதாயம்/இழப்பு, கூட்டுத் தொழிலிலிருந்து கிடைத்த சம்பளம், ம சே நி, வட்டி, வாடகை மற்றும் இதர சிங்கப்பூர் வருமானத்தின் மொத்தத் தொகையாகும்.

## 4. நான் எவ்வாறு எனது தொழில் வருமானத்தை தெரியப்படுத்துவது?

நீங்கள் உங்கள் சுய/கூட்டுத் தொழில் வருமானத்தை 4-வரி அறிக்கையாக பின்வருமாறு தெரியப்படுத்த வேண்டும்.

விற்றுவரவு (மொத்த விற்பனை/வருமானம்/எடுத்த தொகை)

மொத்த ஆதாயம் / இழப்பு

அனுமதிக்கக்கூடிய தொழில் செலவுகள்

சரிசெய்யப்பட்ட ஆதாயம் / இழப்பு

உங்கள் சுய தொழிலின் விற்றுவரவு $100,000-க்கும் குறைவாக இருந்தால், நீங்கள் 2-வரி அறிக்கையை சமர்ப்பித்தால் போதும், அதாவது விற்றுவரவு மற்றும் சரிசெய்யப்பட்ட ஆதாயம்/இழப்பு.

### 4.1 <u>விற்றுவரவு</u>

விற்றுவரவு என்பது, உங்கள் வியாபாரச் செலவுகள் எதனையும் கழிப்பதற்கு முந்திய உங்களது வியாபாரத்தின் மொத்த வரவுகளாகும். பின்வருவன இவற்றில் அடங்கும்.

- சரக்குகள் விற்றதிலிருந்து கிடைத்தத் தொகை
- விற்பனைச் சாவடியிலிருந்துப் பெறப்பட்ட வாடகை

உங்கள் தொழிலின் விற்றுவரவு $500,000 அல்லது அதற்கு மேல் இருந்தால், நீங்கள் சான்றளிக்கப்பட்ட கணக்குளின் அறிக்கையை உங்கள் தனிநபர் வருமான வரிப் படிவத்துடன் சமர்ப்பிக்கவேண்டும்.

உங்கள் தொழிலின் தொழில் தொகை $500,000-க்கு குறைவாக இருந்தால், நீங்கள் சான்றளிக்கப்பட்ட கணக்குகளின் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை. இருப்பினும் நீங்கள் அதைத் தயார் படுத்தி வைத்திருக்கவேண்டும்.
நீங்கள் உங்கள் விற்றுவரவு தொகையைக் கருதாமல் தொழில் பரிமாற்றங்களின் பதிவுகளை முறையாக வைத்திருக்கவேண்டும். எங்களின் கோரிக்கையின் பேரில், நீங்கள் அவற்றை எங்களிடம் சமர்ப்பிக்கவேண்டும்.

### 4.2 <u>மொத்த ஆதாயம் / இழப்பு</u>

விற்றுவரவு தொகையால் விற்கப்பட்ட சரக்குகளின் அடக்க விலையைக் கழித்த பின் பெறும் தொகையையே மொத்த ஆதாயம் / இழப்பு குறிக்கிறது. உதாரணமாக, ஒரு அங்காடி வியாபாரி ஃப்ரைட் நூடுல்ஸ் விற்றால், சரக்குகள் விற்ற செலவு, நூடுல்ஸ் மற்றும் பிற மூலப்பொருட்களின் விலையை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.

### 4.3 அனுமதிக்கக்கூடிய தொழில் செலவுகள்

அனுமதிக்கக்கூடிய தொழில் செலவுகள், செலவுகள் மற்றும் மூலதனக் கழிவுகள் மொத்தமாக மற்றும் தனிப்பட்டதாக உங்கள் வருமானத்தின் உற்பத்தியில் ஏற்பட்டதை உள்ளிடுகிறது. அனுமதிகககக்கூடிய மற்றும் அனுமதிக்கமுடியாத செலவுகளின் சில உதாரணங்கள் பின்வருமாறு:

| அனுமதிக்கக்கூடிய செலவுகள் | அனுமதிக்க முடியாதச் செலவுகள் |
|---|---|
| • கடைக்கு செலுத்திய வாடகை<br>• கடைக்கு செலுத்திய சொத்துவரி<br>• கடைக்கு செலுத்திய அடமான வட்டி<br>• பயனீட்டு கட்டணங்கள் (உதா. மின்சாரம் மற்றும் தண்ணீர்) & எரிவாயு.<br>• தொழிலுக்கானத் தொலைபேசிக் கட்டணங்கள்.<br>• பாதுகாப்புக் கட்டணங்கள்<br>• அங்காடி வியாபாரிகளின் கழிவுப் பொருள் கட்டணம்<br>• பொதிவுப் பொருட்கள்<br>• பட்டுவாடா மற்றும் போக்குவரத்து கட்டணங்கள்<br>• துணையாளர்கள்/உதவியாளர்கள்/துப்புரவு செய்பவர்களுக்கான சம்பளம், கொடையூதியம்<br>• துணையாளர்கள்/உதவியாளர்கள்/துப்புரவு செய்பவர்களுக்காக முதலாளி செலுத்திய கட்டாய மசேநி சந்தா<br>• ஏற்றும் ஊர்திகள், கூண்டூர்திகள், சரக்குந்துகள் போன்ற இன்றுந்துகளைப் பேணுதற்கான செலவுகள்<br>• தொழில் பயன்பாட்டுக்காக வாங்கப்பட்ட நிலையான சொத்துக்களின் மூலதனக் கழிவுகள்<br>• தொழிலுக்காகப் பயன்படுத்தப்பட்ட சொத்தின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவுகள்<br>• கணக்காளரின் கட்டணங்கள் | • உங்கள் சொந்த சம்பளம், கொடையூதியம் மற்றும் மெடிசேவ்/ ம சே நி சந்தா<br>• உங்கள் சொந்த மருத்துவக் கட்டணங்கள், வருமான வரி, காப்புறுதி மற்றும் நன்கொடைகள்.<br>• உணவு மற்றும் வீட்டுச் செலவுகள்<br>• குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கான கேளிக்கை செலவுகள்<br>• தனிப்பயனுக்காகப் பெறப்பட்ட கடன்களின் மீதான வட்டி<br>• உரிமைக்கட்டணம், பதிவுக் கட்டணம், பெயர்பலகைக் கட்டணம் போன்ற துவக்க செலவுகள்<br>• தனியார் உந்து ஊர்திகளின் பராமரிப்பு செலவுகள் (E அல்லது S-தகடு ஊர்திகள்)<br>• உங்கள் வீட்டிலிருந்து சென்று வருவதற்கானப் பயணக் கட்டணங்கள்<br>• வாங்கப்பட்ட நிலையான சொத்துக்களின் விலை<br>• தேய்மானம்<br>• அபராதம் மற்றும் தண்டத்தொகைகள் |

### 4.4 சரிசெய்யப்பட்ட ஆதாயம் / இழப்பு

சரிசெய்யப்பட்ட **ஆதாயம் / இழப்பு,** மொத்த **ஆதாயம் இழப்பிலிருந்து** அனுமதிக்கப்படக்கூடிய தொழில் செலவுகள் மற்றும் கோரப்பட்டப் பிற மூலதனக் கழிவுகளைக் கழித்தபின் கிடைக்கும் தொகையைக் குறிக்கிறது.

## 5. மூலதனக் கழிவுகள் என்றால் என்ன?

நீங்கள் கருவிகள், குளிர்பதனப் பெட்டி மற்றும் ஊர்திகள் போன்ற நிலையான சொத்துக்களை உங்களின் தொழிலுக்காகக் கொள்முதல் செய்ய வேண்டியிருக்கும். இந்த நிலையான சொத்துக்களை வாங்குவதற்காக உட்படுத்தப்பட்டத் தொகை மூலதனத் தன்மை உடையது, நீங்கள் இந்த செலவுகளை கோருவதற்கு அனுமதியில்லை. எனினும், நீங்கள் மூலதனக் கழிவுகளைக் கோரலாம்.

தொழிலுக்காக வாங்கிய நிலையானச் சொத்தின் தேய்மானம், மூலதனக் கழிவுகளாகும், இவை கழித்துக் கொள்ளக்கூடிய செலவாகும்.

## 6. நான் எவ்வாறு மூலதனக் கழிவுகளைக் கணக்கிடுவேன்?

### 6.1 ஓராண்டுக் கழிவுத் தொகை

சொத்தின் முழுச் செலவு ஓராண்டுக்கான மூலதனக் கழிவாகக் கோரப்படும். இது கணிப்பொறிகள், தொலைநகல் இயந்திரங்கள், பிற செயல் இயந்திரங்கள் மற்றும் நிலையான சொத்துக்களின் விலை ஒவ்வொன்றும் $1,000-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். அத்தகைய சொத்துக்களுக்கான ஓராண்டுக் கழிவுத் தொகைக்கான கோருதல் ஒவ்வொரு மதிப்பீட்டு ஆண்டுக்கும் $30,000-க்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது

### 6.2 மூன்றாண்டுக் கழிவுத் தொகை

சொத்தின் முழுச் செலவு மூன்றாண்டுகளுக்கு மேலான மூலதனக் கழிவாகக் கோரப்படும். பொதுவாக, வாங்கப்பட்ட அனேக நிலையான சொத்துக்கள் மூன்றாண்டுக் கழிவுத் தொகைக்குக் தகுதியுடையனவாகும் (இன்றுந்துகள், ஊந்து மிதிவண்டிகள் மற்றும் இலகு சரக்கு ஊர்திகளைத் தவிர).

### 6.3 சொத்தின் இயக்க ஆயுளின் மீதான கழிவுத் தொகை

இந்த முறை ஊர்ந்து மிதிவண்டிகள், கூண்டுர்திகள், ஏற்றும் ஊர்திகள், இருப்புத்தடச் சரக்குவண்டிகள் மற்றும் சரக்குந்துகள் போன்ற உந்து ஊர்திகளுக்குப் பொருந்தும். மூலதனக் கழிவுகள் தனியார் உந்து ஊர்திகளுக்குப் <u>பொருந்தாது.</u>

கொள்முதல் ஆண்டில், நீங்கள் துவக்கக் கழிவாக சொத்தின் விலையில் 20%-ஐக் கோரலாம். இதனைத் தொடரும் ஆண்டுகளில், விலையிலிருந்து 80%-ஐ எடுத்து அதை இயங்கும் ஆயளிலிருந்து வகுத்து, கணக்கிடப்பட்டதை ஆண்டுக் கழிவாகக் கோரலாம்

| சொத்துகள் | இயக்க ஆயுள் (ஆண்டுகளின் எண்ணிக்கை) |
|---|---|
| சரக்குந்துகள், இருப்புத்தடச் சரக்கு வண்டிகள். கூண்டூர்திகள் | 6 |
| ஊர்ந்து மிதிவண்டிகள் மற்றும் மிதிவண்டிகள் | 8 |

**7. எனக்கு தொழில் இழப்புகள் ஏற்பட்டால்?**

அனுமதிக்கக்கூடிய செலவுகளின் கழிவிற்குப் பிறகு உங்களுக்குத் தொழில் இழப்பு ஏற்பட்டால் இந்த இழப்பு மற்றும் கோரப்பட்ட மூலதனக் கழிவுகள் அதே ஆண்டிற்கான உங்களின் மற்ற வருவாய்களான வேலை, வட்டி, லாப ஈவு மற்றும் வாடகை வருமானம் போன்றவற்றுக்கு எதிராக சரியீடு செய்யப்படலாம்.

உங்கள் பிற வருமானங்கள் உங்களின் தொழில் இழப்பை சரியீடு செய்வதற்கு போதுமானதாக இல்லாமல் இருக்கலாம், நீங்கள் உங்கள் மீதமுள்ள தொழில் இழப்புகள் மற்றும் மூலதனக் கழிவுகளை அடுத்த ஆண்டின் வருமானத்திற்கு எதிராகச் சரியீடு செய்துக்கொள்ளலாம்.

உங்கள் தொழில் முடிவுற்றால், நீங்கள் உங்கள் தொழில் இழப்பின் மீதத்தை அடுத்த ஆண்டிற்கு எடுத்துச் செல்லமுடியும், ஆனால் உங்கள் மூலதனக் கழிவை எடுத்துச் செல்ல இயலாது..

## மெடிசேப் பங்களிப்புகள்

**1. நான் மெடிசேவிற்கு பங்களிக்க வேண்டுமா?**

சுயதொழில் செய்யும் அனைவரும், அவர்கள் சிங்கப்பூர் குடிமக்களாகவோ நிரந்தர வாசிகளாகவோ இருந்தால் மெடிசேவ் பங்களிப்புகள் கட்டாயமாகும். நீங்கள் ஒரு ஆண்டில் $6,000-க்கும் அதிகமாக நிகர வர்த்தக வருமானத்தை ஈட்டியிருந்தால் நீங்கள் உங்கள் நிகர வர்த்தக வருமானத்தின் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தின் அடிப்படையில், அதிகபட்சத் தொகையின் வரம்புக்குட்பட்டு மெடிசேவ் தொகையைச் செலுத்த வேண்டும்.

நிகர வர்த்தக வருமானம் உங்களின் மொத்த வருமானத்திலிருந்து அனைத்து அனுமதிக்கக்கூடிய தொழில் செலவுகள், மூலதனக் கழிவுகள் மற்றும் IRAS-ஆல் நிர்ணயிக்கப்பட்டத் தொழில் இழப்புகளை கழித்தத் தொகையாகக் குறிப்பிடப்படுகிறது.

IRAS உங்கள் அசல் வருமானத்தை பொருத்தமான மதிப்பீட்டு ஆண்டின்படி கணக்கிட்டு, நீங்கள் மத்திய சேம நிதிக்கு (மசேநி) பங்களிக்க வேண்டிய மெடிசேவ் தொகையைத்

தெரியப்படுத்தக் கணக்கீட்டு அறிக்கையை (Notice of computation) அனுப்பும். நீங்கள் மசேநி வாரியத்தை மெடிசேவ் செலுத்துதல் சம்பந்தமாகத் தொடர்பு கொள்ளலாம்.

**2. மெடிசேவ் சந்தா மற்றும் தன்னிச்சையாக செலுத்திய மசேநி சந்தாக்களுக்கு நான் சேமநிதி நிவாரணம் கோரமுடியுமா?**

மதிப்பீட்டு ஆண்டு 2008-ல் மதிப்பீடு செய்யப்பட்ட உங்கள் நிகர வர்த்தக வருமானத்தின் 34.5%-ன், மொத்த சட்டப்பூர்வ மசேநி சந்தா விகிதம் அல்லது அந்த ஆண்டில் கட்டுப்படுத்தப்பட்ட மசேநி நிவாரணத் தொகையான $26,393 இதில் எது குறைவோ, அதை சொந்தத் தொழில் புரியும் நீங்கள் செலுத்திய கட்டாய மற்றும் தன்னிச்சை மசேநி சந்தாக்களுக்கு எதிராக நிவாரணமாகக் கோரலாம்.

தொடர்ந்து வரும் மதிப்பீட்டு ஆண்டின், மசேநி விகிதம் மற்றும் நிவாரண வரம்புக்கு, தயவு செய்து IRAS-ன் வலைதளத்தைப் பார்க்கவும்.

நீங்கள் மசேநி கணக்கிற்குப் பங்களித்த நாளின் அடிப்படையில் நாங்கள் சேமநிதி நிவாரணத்தை அனுமதிப்போம். உதாரணமாக, நீங்கள் மசேநி நிவாரணத்தை மதிப்பீட்டு ஆண்டு 2008-ல் கோரினால், நீங்கள் உங்கள் மசேநி பங்களிப்பை 31.12.2007-ல் செய்திருக்க வேண்டும்.

நாங்கள் சேமநிதி நிவாரணத்தை மசேநி வாரியம் அளிக்கும் தகவலின் அடிப்படையில் அனுமதிப்போம், எனினும் மேற்குறிப்பிட்டதுபோல் அந்தத் தொகை கட்டுப்படுத்தப்படும். நீங்கள் உங்கள் வரிக் கணக்கில் கோரத்தேவையில்லை.

## குற்றங்கள் மற்றும் தண்டனைகள்

**1. நான் முறையான ஆவணங்களை வைத்திராமலோ முழுமையற்ற ஆவணங்களை வைத்திருந்தாலோ என்னவாகும்?**

நீங்கள் முறையான பதிவுகளை வைத்திருக்கத் தவறியதாக குற்றஞ்சாட்டப்பட்டால், $1,000-க்கு மிகாத ஒரு அபராதத் தொகைக்கு நீங்கள் உட்படுவீர்கள். அந்த $1,000-யை கட்டத் தவறினால் 6 திங்களுக்கு மிகாத சிறைகாவல் உண்டு.

**2. நான் என்னுடையப் படிவத்தைச் சமர்ப்பிக்கத் தவறினால் என்னவாகும்?**

படிவத்தைச் சமர்பிக்கத் தவறினால், நீங்கள் $1,000-க்கு மிகாத அபராதத் தொகைக்கு உட்படுவீர்கள் மற்றும் இத்தொகையைச் கட்டத் தவறினால் 6 திங்களுக்கு மிகாத சிறைகாவல் உண்டு.

**3. நான் ஏற்கத்தக்க காரணம் ஏதும் இல்லாமல் தவறான படிவத்தைச் சமர்ப்பித்தால் என்னவாகும்?**

ஏற்கத்தக்கக் காரணமின்றி தவறானப் படிவத்தைச் சமர்ப்பித்தால், குறைவாகக் கொடுக்கப்பட்ட வரித் தொகையின் இரட்டிப்பான தொகைக்கு ஈடான தண்டத் தொகையைச் செலுத்துவதற்கு உட்படுவீர்கள். தவிர $5,000-க்கு மிகாத ஒரு அபராதத் தொகையைச் செலுத்துதல் அல்லது 3 ஆண்டுகள் மிகாத சிறைகாவல் அல்லது ஒரு சேர அபராதமும் சிறைகாவலும் பெறக்கூடும்.

**4. நான் வேண்டும் என்றே வரிகளைத் தவிர்த்தால் அல்லது வேறு எவருக்கேனும் தவிர்க்க உதவினால் என்னவாகும்?**

வரி தவிர்ப்பு வழக்குளுக்கு, நீங்கள் வேண்டுமென்றே தவிர்த்தாலோ பிறருக்கும் தவிர்க்க உதவினாலோ, நீங்கள் தவிர்த்த வரித் தொகையைவிட மும்மடங்கு அதிகமாக தண்டத்தொகையைச் செலுத்தவேண்டியிருக்கும். தவிர $10,000-க்கு மிகாத ஒரு அபராதத் தொகையைக் கட்ட வேண்டியிருக்கும் அல்லது 3 ஆண்டுகளுக்கு மிகாத சிறைகாவல் அல்லது ஒரு சேர அபராதத்திற்கும் சிறைகாவலுக்கும் உட்படக்கூடும்.

கடும்மையான ஏமாற்றுத் தவிர்ப்பு வழக்குகளில், நீங்கள் வேண்டுமென்றே தவிர்த்தாலும் அல்லது பிறருக்குத் தவிர்க்க உதவினாலும், நீங்கள் தவிர்த்த வரியைவிட 4 மடங்கு அதிகமாக தண்டத்தொகையைக் கட்டுவதற்கு உட்படுவீர்கள் மற்றும் அபராதமாக $50,000-க்கு மிகாதத் தொகை அல்லது 5 ஆண்டுகளுக்கு மிகாத சிறைகாவல் அல்லது ஒரு சேர அபராதமும் சிறைகாவலும் பெறக்கூடும்.